**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**STC. No.1359/2022 P.W.5**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | வள்ளி | த–பெ | வெள்ளைசாமி |
| ஊர்: | : | புதுமனைநகர் | | |
| வயது: | : | 45/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலிவேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.08.2026**

**எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் புதுமனைநகரில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில் இல்லை. நான்கு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் தோட்டத்திற்கு வேலைக்கு சென்றுவிட்டு வரும் வழியில் எனது அக்காவின் வீட்டின் வழியாக வந்தபோது வீடு, வாசல்கள் உடைக்கப்பட்டு எனது அக்கா மகனின் வாகனம் உடைக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக போலீசார் அங்கு வந்து விசாரணை செய்தார்கள். விசாரணை செய்து படம் வரைந்து மகஜர் ஆவணம் ஒன்று தயார் செய்தார்கள். அதில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அசாஆ 3**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5ம் வகுப்பு. எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் எனது வீட்டின் அருகில் வைத்து செய்தேன். சம்பவ இடத்திற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 2 கிமீ இருக்கும். சம்பவ இடத்திற்கு அருகில் யார் யார் வீடு உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும் கிழக்கு திசையில் சந்திரா என்பவர் வீடும், தெற்கு திசையில் தவமணி என்பவர் வீடும் உள்ளது. கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் நான் படித்து பார்க்கவில்லை. கையொப்பமானது காவல் நிலையத்தில் வைத்து செய்தேன் என்றால் சரியல்ல எனதுவீட்டில் வைத்து செய்தேன். போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.10 17:24:48 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.